# 8. திருடர்கள்

ஒரு முறை நாங்கள் புதிய **IIM**-இன் தளத்தேர்வுக்காக ராஞ்சியில் இருந்து தன்பாத் சென்று கொண்டிருந்தோம். வழியில் ஏராளமான மக்கள் பெரிய கடினமான பையை எடுத்துச் செல்வதைக் கவனித்தோம் அவர்கள் மிதி வண்டியின் மையச் சட்டத்தில்பையை வைத்து இருபுறமும் உள்ள மேலோட்டப் பகுதியை நேர்த்தியாகச் சமம் செய்தார்கள். சாலை சாய்தளமாக இருந்தது, சரிவு மேல் நோக்கி செல்லும் போது கீழே இறங்கி மிதிவண்டியை இழுத்து ஏற்றுவார்கள். மிதிவண்டியின் ஒரு புறம் கட்டப்பட்ட மரத்தாலான தண்டு இருந்தது, அது ஸ்டாண்டாக பயன்படுத்தப்பட்டது. ஒன்று இரண்டு நிகழ்வுகள் அல்ல இப்படி நாங்கள் பலரைக் கண்டோம் எங்கள் வழியில் சில டஜன் மனிதர்களைக் கண்டிருக்கலாம்.

அவர்கள் குழுக்களாக இல்லை, ஆனால் ஒருவரையொருவர் சில பர்லாங்குகள் பிரிந்து தனி நபர்களாகச் சுமைகளைச் சுமந்தனர் அவர்கள் சோர்வாகவும் வியர்வையுடனும் காணப்பட்டனர்.

இப்படி நிலக்கரி சுமக்கும் இவர்கள் யார் என்று உடன் வந்தவர்களிடம் “வெளியாள்கள்” ஆன நாங்கள் கேட்டோம். தொகுப்பாளர் கூறினார் “இந்த மக்கள் ஒருவிதச் சட்ட விரோதச் சுரங்கத்தில் ஈடுபடுகிறார்கள் அவர்கள் திறந்த நிலங்களில் இருந்து நிலக்கரியைத் தோண்டி எடுக்கிறார்கள் எப்படியும் சுமார் நூறு கிலோ எடையுள்ள நிலக்கரியைத் தோண்டி நீண்ட தூரம் நடக்க ஆரம்பித்து கிராமங்களில் தேவை உள்ள வாடிக்கையாளர்களுக்குச் சிறிய அளவில் விற்றுக் குடும்பம் நடத்த பணம் சம்பாதிக்கிறார்கள், அவர்கள் எல்லாப் பைகளையும் விற்றுவிட்டுத் தான் திரும்புவார்கள் இதற்கு ஒன்று முதல் ஐந்து நாள்கள் ஆகலாம்.
"திருடர்கள்!" "நிலக்கரியைத் திருடுகிறார்கள்". என்று உடன் வந்த குழுவில் உள்ள நிபுணர்களில் ஒருவர் உரக்கக் கூறினார்.

இதுவரை நாங்கள் சொல்வதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த எங்கள் வாகனத்தின் ஓட்டுநர் இப்போது அமைதியை இழந்து மறுமொழி கூறினார் “அவர்கள் திருடர்கள் அல்லர். அவர்கள் கடினமாக உழைத்து நிலக்கரியைத் தோண்டுகிறார்கள். நீண்டதூரம் நடந்து சென்று தேவைப்படுபவர்களுக்கு குறைந்தபட்ச விலையில் விற்றுக் குடும்பத்திற்கு ஒருவேளை உணவைப் பெறச் சிறிது பணத்துடன் வீடு திரும்புகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக கிராமவாசிகள் தாபா வாலாக்கள் போன்ற அனைவருக்கும் நிலக்கரி தேவைப்படுகிறது அது குறைந்த விலையில் இவ்வாறு கிடைக்கிறது. யாரோ ஒருவர் சுரங்கங்களில் இருந்து நிலக்கரியை எடுத்து வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டும், பெரிய நிறுவனங்களும் அரசாங்கமும் இதைத்தான் செய்கின்றன. ஒரே வித்தியாசம் என்னவென்றால் இந்தப் பயனர்கள் அவர்களிடமிருந்து ஐந்து முதல் பத்து மடங்கு அதிக விலையில் அதைப் பெறுகிறார்கள் . இந்த எளிய மனிதர்களால் அதிகமான லாபம் ஈட்ட முடியாது ஏனென்றால் இவர்களால் பெரிய அளவில் அகழ்வாராய்ச்சி செய்து எடுத்துச் சென்று நிலக்கரியை அதிக விலைக்கு விற்க முடியாது."

அவர்கள் திருடர்களா? அல்லது இத்தகைய செயல்களை இவ்வளவு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் செய்தும், தொழிலாளர் செலவுகளுக்குக் குறைவாகச் செலுத்தியும், வாடிக்கையாளர்களிடம் அதிக விலையை வசூலித்தும், திடீர் லாபத்தை ஈட்டுவதற்காக விநியோகங்களைக் கட்டுப்படுத்துவதுமாக இருக்கும் சில பெரிய நிறுவனங்களுக்கு இந்த முத்திரை பொருந்துமா? என்று நான்

ஆச்சரியப்பட்டேன். திருடுபவனுக்கும் திருடாதவனுக்கும் இடையே உள்ள எல்லைக்கோடு தான் என்ன?.